




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்

# (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 24.02.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- தேசிய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- முக்கிய தினங்கள்








We Shine Academy TM

# தேசிய நிகழ்வுகள்

- **மும்பை விமான நிலையம்** சமீபத்தில் **வேளாண் மற்றும் மருந்து தயாரிப்புகளை சேமித்து வைக்கும் உலகின் மிகப்பெரிய வெப்பநிலை கட்டுப்பாட்டு வசதியை அறிமுகப்படுத்தியுள்ளது.**
    - தொடங்கப்பட்ட **'ஏற்றுமதி குளிர் மண்டலம்'** ("Export Cold Zone") 700 டன்களுக்கும் அதிகமான சரக்குகளை வைத்திருக்கும் திறன் கொண்டது.
    - மும்பை விமான நிலையம் உலகின் சில விமான நிலையங்களில் ஒன்றாகும். இது நாட்டில் முதல் மற்றும் ஆசியாவில் மூன்றாவது விமானம் IATA CEIV PARMA அங்கீகாரத்தைப் பெற்றது.
    - **செய்தி துளிகள்**
        - IATA CEIV PARMA என்பது சர்வதேச விமானப் போக்குவரத்து சங்கத்தால் (International Air Transport Association- IATA) வழங்கப்பட்ட அங்கீகாரமாகும்.
        - இந்த அங்கீகாரம் மருந்து தயாரிப்புகளை கையாளுவதில் பாதுகாப்பு, செயல்திறன் மற்றும் இணக்கம் ஆகியவற்றை நிறுவுகிறது.

# சர்வதேச நிகழ்வுகள்

- **அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்ப்** சமீபத்தில் பிப்ரவரி 29,

2020 அன்று **தலிபான் படைகளுடன் அமெரிக்கா சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக அறிவித்தார்.**

- ஆப்கானிஸ்தானில் 18 ஆண்டுகால யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான அமைதி ஒப்பந்தத்தில் அமெரிக்காவும் தலிபான் படைகளும் கையெழுத்திட உள்ளன.
- இந்த ஒப்பந்தத்தின் பின்னர், தற்போது ஆப்கானிஸ்தானில் நிறுத்தப்பட்டுள்ள 12,000 அமெரிக்க படைகள் அமெரிக்காவிற்கு திரும்ப உள்ளனர்.
- **செய்தி துளிகள்**
  - தலிபான்கள் தற்போது ஆப்கானிஸ்தானில் போரை நடத்தி வரும் சுன்னி இஸ்லாமிய அடிப்படைவாதிகள். 1996 மற்றும் 2001க்கு இடையில் தலிபான்கள் ஆட்சியைக் கொண்டிருந்தனர்.
  - அவர்கள் ஆப்கானிஸ்தானில் ஒரு சக்திவாய்ந்த அரசியல் மற்றும் இராணுவ அமைப்பாக உருவெடுத்தனர்.

We Shine Academy™

- சுவீடனின் ஸ்டாக்ஹோமில் இரண்டு நாட்கள் நடைபெற்ற சாலைப் பாதுகாப்பு குறித்த உலகளாவிய அமைச்சர்களுக்கிடையேயான மாநாட்டில் **"சாலை விபத்துகளற்ற அணுகுமுறையானது"** அதிக அளவிலான கவனத்தையும் பாராட்டையும் பெற்றுள்ளது,
  - சாலை விபத்துகளினால் எந்தவொரு நபரும் கொல்லப்படக் கூடாது அல்லது வாழ்நாள் முழுவதும் காயமடையக் கூடாது என்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.
  - **செய்தி துளிகள்**

- “சாலை விபத்துகளற்ற அணுமுறை” என்ற கருத்தாக்கமானது **சுவீடன் நாடாளுமன்றத்தினால் 1997ஆம் அண்டில் முடிவு செய்யப்பட்டது.**
- இந்த அணுகுமுறையால் சுவீடன் நாடானது சாலை இறப்புகளை பாதியாகக் குறைத்துள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- ஜோத்பூர் சர்வதேச டென்னிஸ் சங்கம் (ஐடிஎப்) சார்பில் **ஜோத்பூரில் நடைபெற்ற போட்டியில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இந்திய நட்சத்திர வீராங்கனை அங்கிதா ரெய்னா பட்டம்** வென்றார்.

  ஞாயிற்றுக்கிழமை (23/02/20) நடைபெற்ற இறுதிச் சுற்றில் 7-ஆம் நிலை வீராங்கனை பெர்பு செங்கிஸை 7-5, 6-1 என்ற நேர் செட்களில் வீழ்த்தி பட்டம் வென்றார்.

  - **செய்தி துளிகள்**
    - ஏற்கெனவே இரட்டையர் பிரிவில் சினேகல் மாஹேவுடன் இணைந்து இரண்டாவது இடம் பெற்றார்.

## முக்கிய தினங்கள்

- மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு தினத்தையொட்டி பிப்ரவரி 24 அன்று அனைத்துப் பள்ளிகளிலும் மாணவர்கள் அது


We Shine Academy™

தொடர்பான உறுதிமொழி ஏற்க வேண்டும் என பள்ளிக் கல்வித்துறை உத்தரவிட்டுள்ளது.

- பெண் குழந்தைகளுக்காக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய சேவையை நினைவுகூரும் வகையில் அவரது பிறந்த நாளான **பிப்ரவரி 24ம்** தேதியை ஆண்டுதோறும் **மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாகக் கொண்டாட தமிழக அரசு முடிவு செய்துள்ளது.**

## திருக்குறள்

**குறள்: 118**

குறள் பால்: அறத்துப்பால்

குறள் இயல்: இல்லறவியல்

குறள் அதிகாரம்: நடுவு நிலைமை

**சமன்செய்து சீர்தூக்குங் கோல்போல் அமைந்தொருபால்**
**கோடாமை சான்றோர்க் கணி**

**விளக்கம்:** முன் சமமாக நின்று, பின் தன்னிடத்தில் வைக்கப்பட்ட பொருளின் அளவை காட்டும் துலாக்கோல் போல, நடுவு நிலைமையிலிருந்து தவறாதிருத்தல் அறிவுடையோர்க்கு அழகாகும்.